செ.வெ.எண்: 19 நாள்: 13.03.2017

# பத்திரிக்கைச் செய்தி

குடிமராமத்து நீர் நிலைகள் சீரமைத்தல் பணியினை காஞ்சிபுரம் மாவட்டத்தில் இன்று (13.01.2017) **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.கே.எடப்பாடி பழனிசாமி** அவர்கள் துவங்கி வைத்ததை முன்னிட்டு. அரியலூர் மாவட்டம், கல்லங்குறிச்சி, மோரக்குழி ஓடைக்காரன் ஏரி புனரமைத்தல் பணியினை மாண்புமிகு அரசு தலைமை கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்களும், மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்களும் நேரில் பார்வையிட்டனர்.

**“குடிமராமத்து – நீர் நிலைகள் சீரமைத்தல்”** நாள் 21.01.2017 மூலம் அரசு நிர்வாகம் ஒப்புதல் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து பணிகள் துவங்கப்படும் என அறிவித்துள்ளதன்படி அரியலூர் மாவட்டம் மருதையாறு வடிநிலகோட்ட பராமரிப்பிலுள்ள ஏரிகளுக்கு முதற்கட்டமாக **16 பணிகள் ரூ.126.00 இலட்சம்** மதிப்பீட்டில் குடிமராமத்து பணிகள் கீழ் செயல்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

இதில் ஒரு பகுதியாக மருதையாறு அரியலூர் மாவட்டத்தில் வாரணவாசி, சிறுவளூர், புதுபாளையம், பெரியதிருக்கோணம், சுண்டக்குடி, கடம்பூர், முட்டுவாஞ்சேரி ஆகிய கிராமங்கள் வழியாக ஓடி இறுதியாக வைப்பூர் கிராமம் அருகே கொள்ளிடத்தில் கலக்கிறது. அரியலூர் வட்டம், கல்லங்குறிச்சி கிராமம், மோரக்குழி ஓடைக்காரன் ஏரி புனரமைத்தல் பணி அடங்கும். மோரக்குழி ஓடைக்காரன் ஏரி கல்லங்குறிச்சி கிராமத்திற்கு வடகிழக்கு திசையில் 1.60 கி.மீ தூரத்தில் உள்ளது. ஏரிகரையின் நீளம் 371.5 மீ மதகு -1 எல்.எஸ்.218 மீ உள்ளது. ஏரியின் உபரி நீர் போக்கி 10.90 மீ நீளம் மற்றும் பாசனப்பரப்பு 33.60 ஏக்கர் ஆகும்.

ஏரியின் கரை தற்போது வடிவமைப்பு மட்ட அளவை விட குறைவாகவும், மதகு -1 தலைப்பு மற்றும் பக்க சுவர் சேதமடைந்து உள்ளதால், பருவ காலங்களில் ஏரியின் நீரை முழுமையாக சேமித்து, பாசன நிலங்களுக்கு பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. எனவே, கரையை, கனரக இயந்திரங்கள் மூலம் ஏரியின் நீர்பிடிப்பு பகுதியில் மண் எடுத்து பலப்படுத்தவும், மதகு கட்டுமானப் பணிகளை சீர்செய்யவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

செய்தி வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.